# தகவல் தாள்

## விவாகரத்து

இந்தத் தகவல் தாளில், கனடாவில் மத்திய அரசின் *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ், ஒரு விவாகரத்தைக் கோருவது பற்றிய பொதுவான தகவல்கள் உள்ளடங்குகின்றன. துணைவர்களில் எவரேனுமொருவர் விவாகரத்துக் கோரி விண்ணப்பிப்பதற்கு முன்பாக குறைந்தபட்சமாக ஒரு வருட காலமாவது ஒரு கனடிய மாகாணத்தில் அல்லது பிராந்தியத்தில் வசித்தால் மட்டுமே இந்தச் சட்டம் அவருக்குப் பொருந்துவதாக அமையும்.

நீங்கள் அல்லது உங்களது துணைவர் கனடாவில் வசிப்பவராக இல்லையெனில், இந்த *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் நீங்கள் ஒரு விவாகரத்தைக் கோரிப் பெற்றுக்கொள்ள முடியாது. எனினும், நீங்கள் ஒரு சில தகுதிவிதிகளைப் பூர்த்திசெய்வீர்களாயின், வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளில், சிவில் விவாகச் சட்டத்தின் கீழ், உங்களுடைய திருமணத்தை நீங்கள் முடிவுக்கு கொண்டு வரலாம்.

### விவாகரத்து என்றால் என்ன?

விவகாரத்து என்பது திருமணமானவர்கள் தங்களது திருமண ஒப்பந்தத்தை முறித்துக்கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய சட்டபூர்வமான செயல்முறையாகும். திருமணமான தம்பதியினர் மாத்திரமே ஒரு விவாகரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் ஒரு நீதிமன்றத்தால் மட்டுமே ஒரு விவாகரத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும். அந்தச் செயல்முறை முடிவடைந்த பின்னர், ஒரு நீதிமன்றம், நீங்கள் திருமண ஒப்பந்தத்தை முறித்து விவாகரத்துச் செய்தவர்கள் என்பதை எடுத்துக்கூறும் வகையில் ஒரு விவாகரத்துச் சான்றிதழை வழங்கும்.

## எத்தகைய சட்டங்கள் விவாகரத்திற்கு பொருந்துகின்றன?

*விவாகரத்துச் சட்டம்* மத்திய அரசின் சட்டமாகும். இந்தச் சட்டம் கனடாவில் விவாகரத்தைக் கோரும் திருமணமாகிய தம்பதியினருக்கும் அல்லது ஏற்கனவே விவாகரத்துச் செய்துள்ளவர்களுக்கும் பொருந்தும். ஒரு விவாகரத்தைப் பெறுவதற்காக விதிக்கப்படுகின்ற நிபந்தனைகள் தவிர, விவாகரத்து வழக்குகளின் போது குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகை, துணைவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை மற்றும் குழந்தை வளர்ப்புக்கான ஏற்பாடுகள் போன்ற விஷயங்களையும் இது குறிப்பிடுகின்றது. திருமணச் சொத்துக்களைப் பிரிப்பது போன்ற சில விஷயங்களுக்கு மாகாண அல்லது பிராந்தியச் சட்டங்கள் பொருந்தும்.

மாகாண அல்லது பிராந்தியச் சட்டங்கள், திருமணமாகி பிரிகின்ற ஆனாலும் விவாகரத்திற்காக விண்ணப்பிக்காதவர்களுக்கும், மற்றும் திருமணமாகாமல் கூடி வாழ்ந்து பிரிகின்றவர்களுக்கும் பொருந்தும். இந்தச் சட்டங்கள் பொதுவாக சில வித்தியாசங்களுடன், *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் காணப்படும் விதிமுறைகளை ஒத்தவையாகும். இந்தச் சட்டங்கள் பற்றிய விபரங்களை உங்களது மாகாண அல்லது பிராந்திய நீதி அமைச்சிலிருந்து அல்லது தலைமை வழக்குரைஞரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## கனடாவில் நான் ஒரு விவாகரத்தை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம்?

நீங்கள் ஒரு விவாகரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், அதற்காக நீங்கள் அல்லது உங்களது துணைவர் வசிக்கும் மாகாணத்திலுள்ள அல்லது பிராந்தியத்திலுள்ள ஒரு நீதிமன்றத்திற்கு ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். ஒரு மாகாணம் மற்றும் பிராந்தியத்தின் விவாகரத்து விண்ணப்பப் படிவங்களும், நடைமுறைகளும் மற்றொரு மாகாணம் மற்றும் பிராந்தியத்தில் இருந்து வித்தியாசமானதாக இருக்கலாம். உங்களுடைய மாகாணத்தில் அல்லது பிராந்தியத்தில் ஒரு விவாகரத்திற்காக எவ்வாறு

விண்ணப்பிக்கலாம் என்ற விபரங்களை உங்களது மாகாண அல்லது பிராந்திய நீதி அமைச்சிலிருந்து அல்லது தலைமை வழக்குரைஞரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## ஒரு விவாகரத்தைப் பெறுவதற்கு எனக்கு ஒரு காரணம் அவசியமா?

ஒரு விவாகரத்தைப் பெறுவதற்கு, பின்வரும் மூன்று முறைகளில் ஒரு முறையில், உங்களது திருமணம் முறிந்துள்ளது என்பதை நீங்கள் சுட்டிக்காட்ட வேண்டும்.

- நீங்களும் மற்றும் உங்களுடைய துணைவரும் குறைந்தபட்சம் ஒரு வருட காலமாவது பிரிந்து வாழ்ந்துள்ளீர்கள், **அல்லது**
- உங்களுடைய துணைவருடன் தொடர்ந்து சேர்ந்து வாழ முடியாது என்ற அளவுக்கு அவர் உங்களை உடலியல் ரீதியாகவும் மற்றும் மன ரீதியாகவும் கொடுமைப்படுத்தியுள்ளார், **அல்லது**
- உங்களுடைய துணைவர் சோரம் போயுள்ளார்.

## நான் விண்ணப்பிப்பதற்கு காத்திருக்க வேண்டுமா?

நீங்களும் மற்றும் உங்களது துணைவரும் பிரிந்திருக்கின்றீர்கள் என்ற காரணத்தினால் உங்களது திருமணம் முறிந்துள்ளது என்று கோரும் பட்சத்தில், நீங்கள் பிரிந்து வாழ்பவர்களாக இருந்தால் விண்ணப்பிப்பதற்காக காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. எனினும், உங்களது விவாகரத்து அனுமதிக்கப்படுவதற்கு முன்னர், நீங்களும் உங்களது துணைவரும் குறைந்தபட்சம் ஒரு வருட காலமாவது பிரிந்து வாழ்ந்திருக்க வேண்டும்.

உடல் ரீதியாகவும் மற்றும்/அல்லது மன ரீதியாகவும் நீங்கள் கொடுமைப்படுத்தப்பட்டுள்ளீர்கள் அல்லது உங்கள் துணைவர் சோரம் போயுள்ளார் என்ற காரணத்தினால் உங்களது திருமணம் முறிந்துள்ளது எனக் கோரும் பட்சத்தில், நீங்கள் எந்த நேரத்திலும் விவாகரத்திற்காக விண்ணப்பிக்கலாம்.

## பிரிந்து வாழ்ந்த பின்னர் நாங்கள் மீண்டும் ஒன்றாக வாழ முயற்சித்தால் என்ன நிகழும்?

ஒரு வருடம் பிரிந்துள்ளீர்கள் என்ற அடிப்படையில் நீங்கள் விவகாரத்திற்காக விண்ணப்பிக்கும் பட்சத்தில், நல்லிணக்கத்தை அடைவதற்காக மீண்டும் 90 நாட்கள் சேர்ந்து வாழலாம். அந்த முயற்சி பயனளிக்கவில்லையெனில், அந்தக் காலத்தை ஒன்றாகக் கழித்திருக்கவில்லை என்ற அடிப்படையில் விவாகரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு செயல்முறையை நீங்கள் தொடரலாம்.

## எங்களுக்கு குழந்தைகள் இருந்தால் என்ன செய்யலாம்?

பெற்றோர்கள், குழந்தையின் பராமரிப்புக்கான உதவித் தொகைக்கும் குழந்தை வளர்ப்புக்கான ஏற்பாடுகளுக்கும் உடன்படுவார்களாயின் அது சிறந்ததாக இருக்கும். எனினும், கோரிக்கையின் பேரில், நீதிமன்றம் விவாகரத்துச் செயல்முறையின் ஓர் அங்கமாக இந்த விஷயங்களுக்கான ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

திருமணத்தின் மூலம் பிறந்த எந்த ஒரு குழந்தைக்கும் நியாயமான குழந்தைப் பராமரிப்பு ஏற்பாடுகளை நீங்கள் மேற்கொண்டுள்ளீர்கள் என ஒரு நீதிமன்றம் திருப்தியடையும் பட்சத்தில் மட்டுமே உங்களுக்கான விவாகரத்தை அந்த நீதிமன்றம் அனுமதிக்கலாம்.

## என்னால் வழக்குரைஞருக்கான கட்டணத்தை வழங்க முடியாத பட்சத்தில், எனது விவாகரத்து தொடர்பான உதவிகளை நான் எங்கிருந்து பெற்றுக்கொள்ளலாம்?

நீங்கள் நீதிமன்றம் செல்வதற்கு முன்னர் உங்களுக்கும், உங்களது துணைவருக்கும் இந்தப் பிரச்சினைகளில் சிலவற்றை அல்லது அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு உங்களுக்கு உதவும் வகையில் அமைந்த சமரசம் போன்ற குடும்ப நீதிச் சேவைகளை உங்களது மாகாண அல்லது பிராந்திய பிரிவுகள் கொண்டிருக்கக்கூடும்.

## நீதிமன்றத்தில் எனக்கு நானே வாதிட முடியுமா?

குடும்பச் சட்டம் சிக்கல் வாய்ந்ததாக இருக்கலாம். உங்களுடைய நிலைமைக்குப் பொருத்தமான வேறுபட்ட சட்டங்களை நீங்கள் அறிந்திருந்தால் மாத்திரம் போதாது. உங்களுடைய மாகாணத்திலுள்ள அல்லது பிராந்தியத்திலுள்ள நீதிமன்ற நடைமுறைகளையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும். உங்களுக்காக நீங்களே வாதாட வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கு முன்னர், ஒரு தடவையாவது வழக்குரைஞர் ஒருவரிடம் சென்று உங்களுடைய குடும்ப சட்டப் பிரச்சினைகள் தொடர்பான சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது நல்லதொரு யோசனையாகும். இலவசமாக அல்லது குறைந்த கட்டணத்தில் சுருக்கமான சட்ட ஆலோசனையை வழங்கக்கூடிய குடும்பச் சட்டம் தெரிந்த ஒரு வழக்குரைஞரிடம் உங்களை பரிந்துரை செய்து அனுப்பும் வழக்குரைஞர் பரிந்துரை சேவைகள் உங்களுடைய மாகாணம் அல்லது பிராந்தியத்தில் இருக்கக்கூடும்.

## ஒரு விவாகரத்து எப்போது அமுலுக்கு வரும்?

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், நீதிபதி விவாகரத்தை வழங்கும் நாளிலிருந்து 31 நாட்களுக்குப் பின்னர், ஒரு விவாகரத்து அமுலுக்கு வரும். நீதிமன்றம் விவாகரத்தை வழங்கிய பின்னர், பிரிந்த துணைவர்கள் அந்த விவாகரத்தையும், அது அமலுக்கு வரும் காலத்தையும் உறுதிப்படுத்துகின்ற ஒரு விவாகரத்துச் சான்றிதழைக் கோரலாம்.

## எனது விவாகரத்துச் சான்றிதழின் ஒரு பிரதியை என்னால் எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம்?

உங்களுடைய விவாகரத்துச் சான்றிதழின் ஒரு பிரதியை அல்லது உங்களது விவாகரத்து தொடர்பான ஏனைய விபரங்களை நீங்கள் பெற வேண்டுமானால், அவற்றை நீங்கள் அந்த விவாகரத்தை வழங்கிய நீதிமன்றத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள வேண்டும்.

எந்த நீதிமன்றம் உங்களது விவாகரத்தை வழங்கியது என்பது உங்களுக்கு நிச்சயமில்லாத போது, விவாகரத்து நடைமுறைகள் தொடர்பான மத்திய பதிவகத்துடன் தொடர்புகொள்வதன் மூலம் அதை நீங்கள் கண்டறியலாம். ஒரு விவாகரத்து தொடர்பான விரிவான விபரங்களை அல்லது உங்களது விவகாரத்துச் சான்றிதழின் ஒரு பிரதியை இந்தப் பதிவகத்தினால் வழங்க முடியாது. இந்தப் பதிவகம், விவாகரத்தை வழங்கிய நீதிமன்றத்தின் முகவரியையும் மற்றும் உங்களுடைய விவாகரத்துப் பதிவை நீதிமன்றம் தேடிக்கண்டுப் பிடிக்க உதவும் வகையில் அந்த விவாகரத்துப் பதிவுக்கான குறிப்பு எண்ணையும் வழங்கலாம்.

பதிவகத்துடன் தொடர்புகொள்வதற்கு:

- 613-957-4519 என்ற தொலைபேசி எண்ணை அழைக்கவும் அல்லது, காது கேளாதவர்கள் 1-800-267-7676 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்; அல்லது
- தேடுதல் கோரிக்கைப் படிவம் ஒன்றை நிரப்பி அதை அந்தப் படிவத்திலுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

நீங்கள் அழைக்கும் போது உங்களிடம் பின்வரும் விபரங்கள் இருக்கின்றனவா என்பதைத் தயவுசெய்து உறுதி செய்து கொள்ளுங்கள்.

- உங்களுடைய மற்றும் உங்களின் முந்தைய துணைவரின் முழுப் பெயரும் பிறந்த தேதி மற்றும்
- நீங்கள் திருமணம் செய்த தேதி.

***விவாகரத்து மற்றும் பிரிதல் பற்றிய மேலும் பல தகவல்களை இலவசமாக  கனடாவின் நீதித்துறையிலிருந்து வரும் இந்தக் குறுகிய வீடியோவின் மூலம் அல்லது கீழ்க்காணும் எமது இணையதளத்தில் பிரவேசிப்பதன் மூலம் அறிந்துகொள்ளலாம்:***

***Canada.ca/family-law***

**பொறுப்புத்துறத்தல்:** இது ஒரு சட்ட நூல் அல்ல மற்றும்  இது சட்ட ஆலோசனையை வழங்காது. குடும்பச் சட்டம் சிக்கல் வாய்ந்தது என்பதால், தனிநபர்கள் வழக்கமாக குடும்பச் சட்டத்திற்கான ஒரு வழக்கறிஞரிடமிருந்து தங்களுடைய நிலைமை குறித்த ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது மிகச்சிறந்ததாகும். இந்த வழக்கறிஞர்கள், உரிமைகளையும், கடமைகளையும் பற்றிய சட்டரீதியான ஆலோசனையை வழங்குவதில் சிறந்தவர்களாக இருப்பார்கள். பெரும்பாலான மாகாண மற்றும் பிராந்திய வழக்கறிஞர் சங்கங்கள் பொருத்தமான வழக்கறிஞரைப் பரிந்துரை செய்யும் சேவைகளை வழங்குகின்றன. சில வழக்கறிஞர்கள் இலவசமாகவோ அல்லது குறைந்த கட்டணத்திலோ ஓர் ஆரம்பக்கட்ட சட்ட ஆலோசனையை வழங்கலாம் அல்லது தனிநபர்கள் தங்களது குறிப்பிட்ட சூழ்நிலையின் ஒரு சில அம்சங்கள் தொடர்பாக ஒரு சில நேரங்களில்  வழக்கறிஞர் ஒருவரைக் கலந்தாலோசிக்க முடிவு செய்யலாம்.

.